# பள்ளியில் இலவச தொலைபேசி மொழி பெயர்ப்பு

கீழ்க்கண்டவற்றில் உதவுவதற்காக பள்ளியானது ஒரு தொழில்முறையிலான தொலைபேசி மொழிபெயர்ப்பாளரின் சேவைகளைப் பெற முடியும்:

- பெற்றோர்-ஆசிரியர் நேர்முகங்கள்
- ஒரு புதிய பள்ளியில் பதிவு செய்தல்
- பள்ளி ஊழியர்களுடன் சந்திப்புகள் (முதல்வர், ஆசிரியர், சிறப்புக் கல்வி ஆசிரியர் [எஸ்இஆர்டி] [SERT], வழிகாட்டி ஆலோசகர், செயலாளர்)
- பள்ளி பற்றிய கேள்விகள் (அனுமதிப் படிவங்கள், கட்டணங்கள்)

உங்கள் மொழியில் மொழி பெயர்ப்பதற்கான செலவுகளை பள்ளி மேற்கொள்ளம். நீங்கள் பணம் தர வேண்டியதில்லை.

*தமிழிலேயே* நீங்கள் கேள்விகளைக் கேட்க முடியும் அல்லது பதிலளிக்க முடியும். பள்ளி மொழிக்கான தொலைபேசியை உபயோகிக்கும், அதில் ஆங்கிலம் மற்றும் *தமிழ்* பேசுகின்ற ஒரு மொழி பெயர்ப்பாளர் இருக்கிறார். அந்த மொழி பெயர்ப்பாளர் மற்றொரு நகரத்தில் இருக்கிறார். அந்த மொழி பெயர்ப்பாளர் தொலைபேசியில் பேசுவதை நீங்கள் கேட்பீர்கள். அனைத்து தகவல்களும் ரகசியமானவை மற்றும் அந்த மொழி பெயர்ப்பாளர் உங்கள் குழந்தையைப் பற்றி வேறு யாரிடமும் கூற மாட்டார்.